# ஆன்லைன் மூலமாக கட்டணம் செலுத்துவது எப்படி?

## 1 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் (த.நா.மி.உ.ம.ப.க) - இணையதளம்

- **https://www.tnebnet.org/awp/login** என்ற இணையதளத்திற்கு சென்று, உங்கள் நுகர்வோர் எண் கொண்டு பயனாளர் பெயர் (user ID) மற்றும் கடவுச்சொல் (password) பதிவு செய்து கொள்ளவும்.
- பிறகு , உங்கள் பயனாளர் பெயர் (user ID) மற்றும் கடவுச்சொல் (password) பயன்படுத்தி **login** செய்யவும்.




- உங்கள் ஆன்லைன் கணக்கில் உள்நுழைந்த பிறகு '**QUICK PAY**' என்பதைக் கிளிக் செய்து உங்கள் கட்டணத்தைச் செலுத்துங்கள்.




## 2 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் (த.நா.மி.உ.ம.ப.க) - கைபேசி செயலி

- உங்கள் ஸ்மார்ட் போனில், '**Google play store**' க்குச் சென்று எந்த இடைவெளியும் இல்லாமல் '**TANGEDCOMobileApp**' என்று உள்ளிடவும்.
- '**Install**' என்பதைக் கிளிக் செய்க. த.நா.மி.உ.ம.ப.க - கைபேசி செயலி (TANGEDCO Mobile App) தானாக நிறுவப்படும்.




- நிறுவப்பட்ட செயலியில் உங்கள் நுகர்வோர் எண் கொண்டு பயனாளர் பெயர் (user ID) மற்றும் கடவுச்சொல் (password) பதிவு செய்து கொள்ளவும்.
- பிறகு , உங்கள் பயனாளர் பெயர் (user ID) மற்றும் கடவுச்சொல் (password) பயன்படுத்தி **login** செய்யவும்.
- செயலியில் உள்நுழைந்த பிறகு உங்கள் நுகர்வோர் விவரங்களை '**Confirm**' கிளிக் செய்து உறுதிப்படுத்தவும்.
- உறுதிப்படுத்திய பிறகு **'QUICK PAY'** மூலமாக உங்கள் கட்டணத்தைச் செலுத்துங்கள்.




**மின்சார பில் தொடர்பாக நீங்கள் அறிய வேண்டியவை**

**குறிப்பு: த.நா.மி.உ.ம.ப.க - இணையதளம்**

CAG
Citizen consumer and civic Action Group